13

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0418 /2016/ந

ஆணை எண்: 0127 /2016

நாள்: 26 /7 /2016

திருமதி. ஏ.மீனாட்சி,
நகர்மன்ற உறுப்பினர் (33 வது வார்டு),
அருப்புக்கோட்டை நகராட்சி.

மனுதாரர்

நகராட்சி ஆணையர், அருப்புக்கோட்டை

எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரர் திருமதி. A.மீனாட்சி, எண்.32, பாரதிதாசன் 4வது தெரு, வெள்ளைக்கோட்டை, அருப்புக்கோட்டை என்பவர் தாக்கல் செய்த 28.03.2016 நாளிட்ட முறையீடு அவரது 13.05.2016 கடிதத்துடன் 17.05.2016 அன்று நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி முறையீடு எண்.0418/16 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டில் அருப்புக்கோட்டை நகரில் மலையரசன்கோவில் ரோட்டின் தென்புறம் வார்டு c, பிளாக் 5, சர்வே எண்கள்.122/2,122/4,122/5 உள்ள நிலங்கள் கொண்ட பெரிய கண்மாய் உள்வாய் நீர்பிடிப்பு பகுதியில் சிலர் சட்ட விரோதமாக ஆக்ரமித்து நகராட்சி அனுதியின்றி மனைகளாகப் பிரித்து விற்பனை செய்து வருவதாகவும் இது குறித்து வருவாய்த்துறை

அதிகாரிகளும் நகராட்சி ஆணையாளரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து விசாரணைகள் மற்றும் வருவாய் வட்டாட்சியரிடமிருந்து வரப்பெற்ற கூட்டுப்புலத் தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

மனுதாரரது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள நிலம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்திலிருந்து விருதுநகர் மாவட்ட ஆட்சி தலைவரை கேட்டுக் கொண்டுள்ளதாக மனுதாரர் தனது 08.05.2016 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 14.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு தனது தரப்பிலான எதிர்வாதுரை / அறிக்கையினைத் தாக்கல் செய்திடவும் 15.06.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களால் நடத்தப்பட உள்ள விசாரணையின்போது சம்மந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனைக்கு சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்பட்டது. இதனிடையே மனுதாரரின் 18.06.2016 நாளிட்ட பிறிதொரு கடிதத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையரது விசாரணை அறிக்கை பெற்று தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் 15.06.2016 அன்று அருப்புக்கோட்டை வட்டாட்சியர், நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொண்டு உடன் அறிக்கை அளிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களால் நேரடி அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன் அதனை வலியுறுத்தி இம்முறைமன்ற நடுவத்தின் 15.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையும் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனடிப்படையில் வருவாய் வட்டாட்சியருக்கு முகவரியிட்ட நகராட்சி ஆணையரது 17.06.2016 நாளிட்ட கடித்த்தில் கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்வதற்கான நாள் நிர்ணயித்தல் குறித்து தகவல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கூட்டுப் புலத்தணிக்கை அறிக்கை அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியரால் ந.க.அ2/17059/15, நாள்.30.06.2016 உதவி இயக்குநர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, விருதுநகர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு அதன் நகலொன்று இம்முறை மன்ற நடுவத்திற்கும் வரப்பெற்றுள்ளது.

மேற்படி அறிக்கையில் மனுதாரரது புகார் மனு தொடர்பான 28.06.2016 அன்று அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர், மண்டல துணை வட்டாட்சியர்–1,

நகர சார் ஆய்வாளர் ஆகியோருடன் வருவாய் வட்டாட்சியரால் கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புகாரில் குறிப்பிட்டுள்ள புல எண்கள் அருப்புக்கோட்டை நகரளவையில் தாக்கலாக்கியுள்ள விவரங்களும், வருவாய் கோட்டாட்சியரது பட்டா மாறுதல் உத்தரவுகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரப்புல எண்கள் 6/5 (122/5) கண்மாய் உள்வாய் சர்க்கார் புறம்போக்கு என உள்ளதாகவும் மேற்கண்ட இடங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லையெனவும் குறிப்பிட்டுள்ளது. மேற்படி விவரங்கள் புலத்தணிக்கையிலும் கிராம ஆவணங்ளை ஆய்வு செய்ததின் பேரிலும் தெரிய வருவதாகவும், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் ஆக்கிரமிப்பு ஏதுமில்லையெனவும் மேற்படி அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்களடங்கிய அறிக்கையின் நகலொன்று அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியரால் மனுதாரருக்கும் முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்முறையீட்டினை முற்றாக்கிட முடிவு செய்து இம்முறைமன்ற நடுவத்தால் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திருமதி. ஏ.மீனாட்சி,
   நகர்மன்ற உறுப்பினர் (33 வது வார்டு),
   32. பாரதிதாசன் 4வது தெரு,
   வெள்ளைக்கோட்டை, அருப்புக்கோட்டை,
   விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   அருப்புக் கோட்டை நகராட்சி ,
   விருதுநகர் மாவட்டம்.

3. வருவாய் வட்டாட்சியர்,
   அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம்,
   அருப்புக் கோட்டை, விருதுநகர் மாவட்டம்.